

ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் நேற்று முன்தினம் (18.8.2024) சென்னை ராஜீவ்காந்தி அரசுத் தலைமை மருத்துவமனைக்குச் சென்று, மறைந்த கடலோர காவல்படையின் தலைமைத் தளபதி ராகேஷ் பால் அவர்களது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு புதுச்சேரி கடல்பகுதியின் தலைமை கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரவி குமார் திங்ரா ஆகியோர் உடனிருந்தனர்.

### நாகையில் 3வது புத்தகத் திருவிழா!

# அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

### என்.கௌதமன் – உ. மதிவாணன் பங்கேற்பு!

நாகை, ஆக. 20-

நாகை மாவட்டம் நாகை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்ககம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் இணைந்து நடத்தும்; மூன்றாவது புத்தக திருவிழா நடைபெற்றது விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ் தலைமை தாங்கினார்.

நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை. செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

சட்டத்துறை (சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை, ஊழல் தடுப்புச் சட்டம்) அமைச்சர் .எஸ். ரகுபதி தொடங்கி வைத்து பேசுகையில் புத்தகத் திருவிழா என்பது ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள பள்ளி கல்லூரி மாணவர்களுக்கிடையே வாசிப்பு திருமணம் அதிகப்படுத்த வேண்டும்.

வாசிப்பதில் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். வாசிப்பதின் கலையை கற்றுத் தர வேண்டும் என்ற எழுச்சி நோக்கத்தோடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் புத்தகத்திருவிழாவினை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வாசிக்க வேண்டும், வாசிப்பை நேசிக்க வேண்டும் எப்படி ஒவ்வொருவரும் வாசிப்பதினால் முன்னேறி இருக்கிறார்கள் என்பதை எல்லாம் இளைய சமுதாயமும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்கு நேரம் ஒதுக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த புத்தகத்திருவிழாவினை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த மூன்றாவது புத்தக திருவிழாவானது இன்றைய தினம் 16.08.2024 தொடங்கி 26.08.2024 வரை நடைபெறுகிறது. இந்த புத்தக திருவிழாவில்; பல்வேறு பகுதிகளிலிருந்து 50 பதிப்பாளர்கள் கலந்துக்கொண்ட 116 புத்தக அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து வகையான புத்தகங்கள், தமிழ், ஆங்கிலம் உள்ளிட்ட பல்வேறு மொழிகளிலும் உள்ள சுமார் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் இடம் பெற்றுள்ளது. மேலும் பொதுமக்கள் ரூ.10லிருந்து ரூ.1000 வரை வாங்கும் புத்தகங்களுக்கு 10% தள்ளுபடி உண்டு.

தினந்தோறும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், தமிழ் அறிஞர்களி;ன் கருத்தரங்ககளும் கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

தங்கள் பிள்ளைகளுக்கு எப்படி சொத்து மற்றும் பொருள்கள் சேர்த்து வைக்கின்றோமோ, அதே போல தான் நல்ல புத்தகங்களை வாங்கி வைப்பதும் மிக சிறந்த தலைமுறைக்கான சேமிப்பாகும் பிள்ளைகளின் புத்தக வாசிப்பிற்கு நாமே முன் உதாரணமாக நல்ல புத்தகங்களை வாசிப்பதன் மூலம் மிகச் சிறந்த ஆளுமை மிக்க மனிதராக நம்மை மாற்றிக் கொள்ள முடியும் இந்த புத்தக திருவிழானது மாணவ மாணவியர் மற்றும் பொதுமக்களிடையே சென்று சேர வேண்டும் என்ற நோக்கத்தில் நடத்தப்படுகிறது.

சிறந்த நூல்களின் ஒரு சில பக்கங்கள் கூட பலரது வாழ்வையே மிகச்சிறந்த உயரத்திற்கு எடுத்துச் சென்ற வரலாறுகள் உண்டு. இந்த புத்தகத் திருவிழா இலட்சக்கணக்கான நல்ல புத்தகங்களை ஒரே இடத்தில் பெறுவதற்கான அருமையான வாய்ப்பாகும். தமிழ்நாடு அரசு உருவாக்கி தந்திருக்கின்ற இந்த பெரிய வாய்ப்பை அனைவரும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புத்தகத் திருவிழாவிற்கு வருகை தந்து அரங்குகளை பார்வையிட்டு சென்று விடுவதோடு நிறுத்திக் கொள்ளாமல், புத்தகங்களை வாங்கி செல்ல வேண்டும் புத்தகங்களுக்காக செலவிடுகின்ற தொகை என்பது செலவல்ல, அது மிகச் சிறந்த மூலதனம் என சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் குப்பைத்தொட்டி என்கிற சிறுகதையோடு, நாகப்பட்டினம் மாவட்டத்தின் 30 சிறுகதை எழுத்தாளர்கள் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பினை மாண்பு மிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு, அதனை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டார்.

மேலும் இவ்விழாவில் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் ரூ.1 இலட்சமும், தமிழ்நாடு மீனவளர்ச்சி கழகத்தலைவர் அவர்கள் ரூ.10 ஆயிரமும் புத்தகத்திருவிழா விற்கு நன்கொடை வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து பொதுமக்களின் கோரிக்கைகள், புகார்கள் தொடர்பாக கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக தொடர்பு கொள்ள மாவட்ட ஆட்சியரக அலுவலக உதவி மையத்தை சட்டத்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ரா.பேபி, தலைமை செயற்குழு உறுப்பினர் பா கோவிந்தராஜன், க.ராஜேந்திரன், இல.மேகநாதன் மாவட்ட கழக துணை செயலாளர்கள் சோ. ரவிச்சந்திரன், ஆரூர். மணிவண்ணன், நாகை நகரக் கழகச் செயலாளரும், நாகை நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, நாகூர் நகர கழக செயலாளர் எம் ஆர் செந்தில்குமார், ஒன்றய ஒன்றிய கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், கே. பழனியப்பன், என்.சதாசிவம், உதயம் வே. முருகையன், என் ஆனந்த், சோ.பா. மலர் வண்ணன், திட்டச்சேரி பேரூர் செயலாளர் முகமது சுல்தான்,. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெ.ரூபன் சங்கர் ராஜ், நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் ரு.அரங்கநாதன், தென்இந்திய புத்தகவிற்பனையாளர் சங்க தலைவர் .முருகன்;, மற்றும் கழக ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு பணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் சின்னசேலம் பேரூர் வார்டு எண் 12 கழக மூத்த முன்னோடி பெரியவர் ராஜமாணிக்கம் அவர்களின் இறப்பை அறிந்து கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர்,ஒன்றிய குழு துணை தலைவர் வி.வி.அன்புமணிமாறன், சின்னசேலம் கடைவீதி 12வது வார்டில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று அவரது பூத உடலுக்கு கழகத்தின் இரு வண்ண கொடி அணிவித்து மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அவரை இழந்து வாடும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆறுதல் அளித்தனர். இதில் பேரூர் கழக அவைத்தலைவர் அய்யாசாமி உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு கவுன்சிலர்கள் என அனைவரும் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.



கழக முன்னாள் அமைப்பு செயலாளர் விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். எஸ். (என்கின்ற) எம்.செல்வராஜ் அவர்களின் 27 ஆம் ஆண்டு நினைவஞ்சலி கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் தலைமையில் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக, நகரக் கழக, பேரூர் கழக, கிளை கழக வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் நகர மன்ற தலைவர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### குமாரபாளையம் முரசொலி முகவரின் மனைவி

# பி.ஜமுனா (எ) குஷ்பு மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

நாமக்கல் ஆக.20-

நாமக்கல் மேற்கு மாவட்டம் மாணவரணி துணை அமைப்பாளரும் குமாரபாளையம் முரசொலி முகவருமான ஏ.ஐயப்பன் (எ) பெருமாள் மனைவி பி. ஜமுனா (எ) குஷ்பூ உடல்நிலை சரியில்லாமல் 19.8.2024 திங்கட்கிழமை அதிகாலை மறைவெய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



தகவல் அறிந்ததும் அன்னார் அவர்களின் உடலுக்கு கழகத்தினர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி கழக இளைஞர் அணி செயலா ளரும் இளைஞர் நலன் மற் றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா திருமண மண்டபத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தலைமையிலும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் , புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா.இளையராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் சு. சண்முகம், த.மணிராஜன், பேச்சுப் .போட்டி நடுவர்கள் முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம், தமிழக அரசு தலைமை கொறடா கோவி.செழியன் எம்.எல்.ஏ, கவிஞர் சல்மா, மதுரை பாலா, மருத்துவர் சஃபி சுலைமான், கணேஷ் பாபு, த.சந்திரசேகரன், சுப. சரவணன், துணை மேயர் எம். லியாகத் அலி, துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துசாமி, முகம்மது ரபீக் , விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷீத், இரா. தமிழ் ராசு, நசுருதீன். அருண் சேகர், இளையராஜா, மாநகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கணேஷ் மற்றும் மாநகர,ஒன்றிய, நகர, இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கழக முன்னாள் அமைப்புச் செயலாளர்

# விருத்தாசலம் எம்.செல்வராஜ் நினைவு நாள் நிகழ்ச்சி!

### எம்.எஸ். கணேஷ்குமார் தலைமையில்! கழக நிர்வாகிகள் பங்கேற்பு!

கடலூர், ஆக. 20 -

கழக முன்னாள் அமைப்புச் செயலாளர் ஒன்றுபட்ட தென்னாற்காடு மாவட்டக் கழக செயலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களால் “சீமான் வீட்டு செல்லப் பிள்ளை” என்று அழைக்கப்பட்டவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களிடம் நன்மதிப்பைப் பெற்றவர், கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் ஓராண்டு மிசாவில் சிறைசென்றவர் விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.எஸ். (என்கிற) எம். செல்வராஜ் அவர்களின் 27.வது ஆண்டு நினைவஞ்சலி நேற்று முன்தினம் 18.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று அனுசரிக்கப்பட்டது.

முன்னதாக விருத்தாசலம் பாலக்கரை ரவுண்டானாவில் அமைக்கப்பட்ட அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் அங்கிருந்து அவரது இல்லத்திற்கு அமைதி ஊர்வலமாகச் சென்று அன்னாரது படத்திற்கு மலர் தூவி மவுன அஞ்சலி செலுத்தப் பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ் குமார் தலைமை தாங்கினார். விருத்தாசலம் நகரக் கழக செயலாளர் க.தண்டபாணி வரவேற்புரையாற்றினார். ஒன்றிய கழக செயலாளர்கள் தி.வேல்முருகன் பாவாடை கோவிந்தசாமி கனக. கோவிந்தசாமி நகர மன்ற தலைவர் சங்கவி முருகதாஸ் ஒன்றிய செயலாளர்கள் சுரேஷ் ஆசைத்தம்பி பொதுக்குழு உறுப்பினர் அரங்க. பாலகிருஷ்ணன் நகரத் துணைச் செயலாளர்கள் எஸ்.ராமு நம்பிராஜன் சுந்தரமூர்த்தி, மாவட்ட பிரதிநிதிகள் ஆட்டோ பாண்டியன், வயலூர் கு.பழனிச்சாமி மாவட்ட நிர்வாகிகள் சதீஷ், எம்.கே.அருள் குமார், கே.ரவிச்சந்திரன், அண்ணாதுரை, அறிவுடை நம்பி, காந்தி, செல்வமணி, சுரேஷ், பாசில் இளைஞர் அணி அமைப்பாளர்கள் பொன். கணேஷ், தர்ம. மணிவேல், சீனு, நடராஜ், வெங்கடேசன், அருண் குமார், துணை அமைப்பாளர்கள் குமார், தளபதி தனசேகர், கார்த்திக், வெங்கடேசன், நிஷாந்த், ஸ்ரீதர், ரமேஷ் சிங், நூறு பாஷா, முத்துக்குமார், ராம்சிங், கிருஷ்ணா, ரூபன், மார்ட்டின் உள்ளிட்ட ஒன்றிய நகர பேரூர் கழக வார்டு கழக நிர்வாகிகள் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.

### திருப்பத்தூர் நாடாளுமன்றத் தொகுதி கந்திலியில்

# சி.என்.அண்ணாதுரை எம்.பி. தொகுதி மக்களுக்கு நன்றி!

திருப்பத்தூர் ஆக 20-

திருப்பத்தூர் தொகுதியில் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் திருவண்ணாமலை நாடாளு மன்ற தொகுதியில் வெற்றி பெற்ற சி.என். அண்ணாதுரை எம்.பி. தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு கிராமம் கிராமமாக சென்று நன்றி தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், நல்லதம்பி எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். கந்திலி ஒன்றிய குழுத்தலைவர் திருமதி திருமுருகன் கந்திலி கிழக்கு ஒன்றிய செயலாளர் மோகன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வடிவேல் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை திருப்பத்தூர் தொகுதி உட்பட்ட ஊராட்சிகளான புதுக்கோட்டை குறும்புகேரி மாடப்பள்ளி அகரம் கதிரம்பட்டி மற்றும் சுந்திலி ஒன்றில் கசிநாயக்கன் பட்டி சு.பள்ளிப்பட்டு. வெங்களாபுரம், முத்தம்பட்டி, விஷமங்கலம், குரும்பேரி, பேராம்பட்டு ஆகிய ஊராட்சி பகுதிகளில் உள்ள வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பேசுகையில், நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் தமிழக மக்களுக்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழக சட்டமன்றத்தின் மூலம் வழங்கப்படும் அனைத்து நலத்திட்ட உதவிகளும் மக்களை தேடி சென்றடையும். அதேபோல் தமிழக மக்களுக்காக வழங்கப்படும் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு உடனுக்குடன் கிடைக்க வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை தமிழக மக்களுக்காக வழங்கி வருகிறார்.

அதேபோல் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் மூலம் விடுபட்ட பயனாளிகளை பரிசீலனை செய்து விடுபட்ட அனைத்து பயனாளிகளுக்கும் கட்டாயம் மகளிர் உரிமை தொகை வழங்கப்படும். மேலும் திருப்பத்தூர் தொகுதிக்கு தேவையான அனைத்து நலத்திட்ட உதவிகளும் வளர்ச்சி பணிகளும் சாலை வசதிகள் மற்றும் கட்டுமான பணிகள் போன்ற அனைத்து வசதிகளும் உடனுக்குடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை

இவ்வாறு மக்களிடம் நன்றி கூறி பேசினார்.



திருப்பூர் மாவட்டம், சாமளாபுரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு சாமளாபுரம் பேரூராட்சி தலைவர் விநாயகா பழனிச்சாமி தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் சாமளாபுரம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, முன்னாள் செயலாளர் இளங்கோ, வார்டு செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, காளிபாளையம் பழனிச்சாமி, வார்டு கவுன்சிலர்கள் மைதிலி பிரபு, மகாலட்சுமி பாலச்சந்தர், கிருஷ்ணவேணி ராமசாமி, நித்யா, ஆரோக்கியமேரி இருதயசாமி, துளசிமணி ஆறுமுகம், வினோஜ் தயாளன், இளைஞர் அணி நிர்வாகி கருணாநிதி, சாமளாபுரம் எஸ்.வி.எஸ்.ராமசாமி உள்பட பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



78 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு சேலம் மாவட்டம் ஆத்தூர் அரசு ஆண்கள், பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டியை கிழக்கு மாவட்ட பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கவுன்சிலர்கள் மீனாட்சி, புஷ்பாவதி, தலைமையாசிரியர் பொன்முடி, மாவட்ட தகவல் தொழில் நுட் அணி அமைப்பாளர் அருண், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆவின் செல்வமணி, ராஜேந்திரன், பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர், மற்றும் உறுப்பினர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.